பக்கங்கள் 17

# மாலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 மார்கழி 25 புதன்கிழமை 10.01.2024 அதிர்வு 163

## வட மாகாண பொங்கல் விழா 16ஆம் திகதி கிளிநொச்சியில்

வடக்கு மாகாண பொங்கல் விழா எதிர்வரும் 16ஆம் திகதி கிளிநொச்சி பல்லவராயன்கட்டில் நடைபெறவுள்ளது.


வடக்கு மாகாண கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில்

04

### வடக்கு - கிழக்கின்

# பொருளாதார வளங்களை அழித்துவிட்டு அபிவிருத்தி தொடர்பில் பேசுகிறீர்களா?

## அரசின் செயலே தமிழ் பொது வேட்பாளரை நிறுத்துவதற்கான சூழ்நிலையை நிர்ப்பந்தித்துள்ளது என்று சுரேஷ் சுட்டிக்காட்டு



(எஸ்.நிதர்ஷன்)

“நாட்டின் அந்நியச் செலாவணியை சேமிப்பதற்கும் விவசாயத்தைத் தொழிற்சாலையாக மாற்றுவதற்கும் உழைத்த வடக்கு - கிழக்கின் பொருளாதார வளங்களை அழித்துவிட்டு அதற்காக ஒரு வருத்தம்கூட தெரிவிக்காதவர்கள் இன்று வடக்கின் பொருளாதார அபிவிருத்தி குறித்து பேசுவது தேர்தல் பிரசாரத்திற்காக மட்டுமே. தென்னிலங்கை அரசியல் சக்திகளிடத்தில் அனைத்து தேசிய இனங்களையும் ஐக்கியப்படுத்தி நாட்டுப் பற்றுடன் இலங்கையை வளமிக்க நாடாக மாற்றுவதற்கான எந்தத் திட்டமும் இல்லை என்பதும் நாட்டு மக்களைப் பிளவுபடுத்தி தமக்கான

05



# முல்லைத்தீவில் மீண்டும் கன மழை; குளங்களின் வான் கதவுகள் திறப்பு

## தாழ்நிலப் பகுதிகளில் வெள்ளம்

முல்லைத்தீவு மாவட்டத்தில் மீண்டும் தொடர்ச்சியாக மழை பெய்து வருகின்ற நிலைமையில் தாழ்நிலப் பகுதிகள் பல வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

நேற்றுமுன்தினம் முதல் தொடர்ச்சியாக மழை பெய்து வருகின்ற நிலைமையில் நீர் வரத்தைக் கருத்தில் கொண்டு முல்லைத்தீவு மாவட்டத்தின் பாரிய நீர்ப்பாசனக் குளமான முத்துஐயன்கட்டு குளத்தின் நான்கு வான்கதவுகளும் நேற்றுக் காலை முதல் ஆறு அங்குல அளவில் திறந்துவிடப்பட்டிருந்தன. நீர் வரத்து அதிகரித்த நிலையில் இன்று நான்கு வான்கதவுகளும் ஒரு அடி

04



உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்-Bonding Tamils Globally




# வலி. வடக்கில் 23 ஏக்கர் காணிகளை விடுவிக்க இராணுவம் நடவடிக்கை

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் உயர் பாதுகாப்பு வலயத்தினுள் உள்ள 23 ஏக்கர் காணிகளை விடுவிக்கவுள்ளதாக இராணுவத்தினர் யாழ். மாவட்ட செயலகத்திற்கு அறிவித்துள்ளனர்.

வலிகாமம் வடக்கில் வறுத்தலைவிளான் பகுதியில் உள்ள காணிகளையே விடுவிக்கவுள்ளதாக இராணுவத்தினர் அறிவித்துள்ளனர்.

வலிகாமம் வடக்கில் சுமார் 3 ஆயிரம் ஏக்கர் காணி முப்படைகளின் வசம் உள்ள நிலையில் , அவற்றை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுக்கப்பட்ட நிலையில், 23 ஏக்கர் காணிகளை விடுவிக்க இராணுவத்தினர் நடவடிக்கை எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# முல்லைத்தீவில் அதிகாலை தீ விபத்து; இலத்திரனியல் திருத்தகம் எரிந்து நாசம்

## கடையின் உரிமையாளர் சபரிமலை சென்ற நிலையில் அனர்த்தம்

(ந.லோகதயாளன்)

முல்லைத்தீவு மாவட்டம், தண்ணீரூற்றுப் பிரதேசத்தில் இடம்பெற்ற தீ விபத்தில் இலத்திரனியல் திருத்தகம் ஒன்று முழுமையாக எரிந்து நாசமாகியுள்ளது.

இன்று அதிகாலை இடம்பெற்ற இந்தத் தீ விபத்தால் கடையும் கடையில் இருந்த பொருள்களும் தீயில் எரிந்து அழிவடைந்துள்ளன.

தீயில் அகப்பட்ட கடைக்கு இரு திசைகளிலும் கடைகள் இணைந்து இருந்துள்ள போதும் அயலவர்கள் கூடி தீ பரவாமல் கட்டுப்படுத்தியுள்ளனர்.

கடையின் உரிமையாளர் ஐயப்ப பக்தன் என்பதால் கடையைப் பூட்டி விட்டு கடந்த வாரம் அவர் சபரிமலைக்குச் சென்றுள்ள நிலையில், இந்தத் தீ விபத்து இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் முள்ளியவளைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.




# தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலையின் ஐம்பதாவது ஆண்டு நினைவேந்தல் இன்று

## யாழ். முற்றவெளி நினைவாலயத்தில் நிகழ்வு

**(எஸ்.நிதர்ஷன்)**

உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலையின் ஐம்பதாவது ஆவது ஆண்டு நினைவேந்தல் இன்று யாழ்ப்பாணத்தில் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் படுகொலை செய்யப்பட்டவர்களின் 50 ஆவது ஆண்டு நினைவேந்தல் இன்றாகும்.

யாழ். முற்றவெளியில் அமைந்துள்ள உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலை நினைவாலயத்தில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சொலமன் சிறில் தலைமையில் இன்று காலையில் நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்றது.

இதன்போது உயிர்நீத்தவர்களுக்கு அகவணக்கம் செலுத்தி பொதுச் சுடர் ஏற்றப்பட்டு மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த நினைவேந்தல் நிகழ்வில் மதத் தலைவர்கள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், கட்சி ஆதரவாளர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

1974ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 3ஆம் திகதி தொடக்கம் 10ஆம் திகதி வரை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் ஏற்பட்ட கலவரத்தில் 9 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர். உலகளாவிய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த இந்த மாநாட்டை யாழ்ப்பாணத்தில் நடத்தவிடாமல் அப்போதைய ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான அரசு, பொலிஸாரை அனுப்பிக் கலவரத்தை ஏற்படுத்தியது என்பது குறிப்பிடத்தக்கது.






# கடற்கரைகளைப் பாதுகாக்கும் வகையில் 24 வேலைத் திட்டங்கள் இந்த வருடத்தில்

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவிப்பு



இந்த வருடம் 9 கரையோரப் பாதுகாப்புத் திட்டங்கள் மற்றும் சதுப் புநில தாவரங்கள் நடுதல் உள்ளிட்ட 24 வேலைத் திட்டங்களும் நடை முறைப்படுத்தப்படவுள்ளன என்று கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரை யோர வள முகாமைத்துவ திணைக் களம் தெரிவித்துள்ளது.

திராணாகம, தெற்கு உடப்புவ, வடக்கு உடப்புவ, நிந்தவூர், சாய்ந்தமருது, மூதூர், வத்தளை, மடிஹ, கொலின்ஜா டிய மற்றும் கொளவெல்ல ஆகிய கடற்கரைகளைப் பாதுகாக்கும் வகை யில் இந்தத் திட்டங்கள் அமுல்படுத் தப்படவுள்ளன என்று நகர அபி விருத்தி மற்றும் வீடமைப்பு அமைச் சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித் துள்ளார்.

இதற்காக திறைசேரி 623 மில்லியன் ரூபா நிதியை ஒதுக்கியுள்ளது. ஏற்க னவே 300 மில்லியன் ரூபா ஒதுக் கீடு செய்யப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு (2023) 7 கடலோர பாதுகாப்பு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன என்று கடலோர பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவத் திணைக்களம் தெரி வித்துள்ளது.

இந்த திட்டம் தீவைச் சுற்றி 1,220 மீற்றர் கடற்கரையை பாதுகாக்கும் என்று அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரி வித்துள்ளார்.

இந்தத் திட்டத்துக்காகத் திறைசேரி 388 மில்லியன் ரூபா நிதியை ஒதுக் கியது என்றும் அமைச்சர் கூறினார்.

மொரட்டுவை, களுத்துறை, கலிடோ கடற்கரை, அம்பலாங்கொடை, போரு தொட்டை, சாய்ந்தமருது, நிந்தவூர் மற்றும் திருக்கோவில் ஆகிய பகுதி களில் அந்த கரையோர பாதுகாப்புத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப் படவுள்ளன.

இரணைவில, உப்பாறு, கிரிமுந்த லம், மூதூர், காரைதீவு, நிந்தவூர், புஸ்ஸ, தல்தியவத்தை, கொக்கல, சாய்ந்தமருது, மாளிகைக்காடு, காத்தான்குடி மற்றும் உஸ்வதகையாவ ஆகிய இடங்களில் 14 அவசரகால கரையோரப் பாதுகாப் புத் திட்டப்பணிகள் பூர்த்தி செய யப்பட்டுள்ளன. 1,380 மீற்றர் கரையோ ரப் பகுதி பாதுகாக்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கடலோரப் பாதுகாப்பு மற்றும் கட லோர வள முகாமைத்துவத் திணைக் களம் சதுப்புநிலத் தாவரங்கள் நடும் 25 வேலைத் திட்டங்களையும், கடற் கரையை சுத்தம் செய்யும் 90 திட்டங் களையும் செயல்படுத்தியுள்ளது.

கடற்கரையோரத்தில் ஏற்கனவே 26 சுற்றுலாத் தளங்களைக் கொண்ட இடங்கள் கண்டறியப்பட்டு, அவற்றை மேம்படுத்த நகர அபிவிருத்தி அதி காரசபையுடன் இணைந்து பூர்வாங்க திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வரு கிறது.

கரையோர சுற்றாடலை பாதுகாக்கும் வகையில் அந்த வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துமாறு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க ஆலோசனை வழங்கியுள்ளார் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### வட மாகாண...

நடைபெறவுள்ள இந்தப் பொங்கல் விழாவில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் பி.எம்.எஸ். சார்ள்ஸ் கலந்துகொள்ளவுள்ளார்.

இந்தப் பொங்கல் நிகழ்வில் சம்பிர தாயபூர்வமாகப் புதிர் எடுத்து பொங்கல் இடம்பெறவுள்ளது. அதனைத் தொடர்ந்து பாரம்பரிய கலை நிகழ்வுகளும் நடை பெறவுள்ளன.

### முல்லைத்தீவில்...

மூன்று அங்குல அளவில் திறந்து விடப்பட்டுள்ளன.

இதேபோன்று தண்ணிமுறிப்பு குளத் தின் மூன்று வான்கதவுகளும் திறந்து விடப்பட்டுள்ளன. ஏற்கனவே குளங்கள் நிறைந்து காணப்படும் நிலையில் குளங்கள் பல வான் பாய்கின்றன.

இதேவேளை, இன்றும் தொடர்ச்சியாக மழை பெய்து வருகின்ற நிலைமை



யில் தாழ்நிலப் பகுதிகளில் வெள்ள நீர் தேங்கி நிற்பதோடு மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சியாக மழை பெய்து வரு கின்ற காரணத்தால் ஏற்கனவே குளங்கள் அனைத்தும் நிறைந்து காணப்படுகின்ற நிலைமையில் சகல குளங்களிலும் வான் பாய்கின்ற நிலைமை உருவாகி இருக்கின்றது. எனவே, மழை தொடர்ச்சி யாகப் பெய்தால் இன்னும் பாதிப்புகள் அதிகரிக்கலாம். எனவே, தாழ்நிலப் பகுதிகளைச் சேர்ந்த மக்களை அவ தானமாக இருக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# முதலாம் பக்கத் தொடர்ச்சி

**பொருளாதார வளங்களை...**

வாக்கைப் பெற்றுக்கொள்வதை மட்டுமே நோக்கமாகக் கொண்டுள்ளன என்பதும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அண்மைய வடக்கு மாகாண விஜயமும் நிரூபித்துள்ளது.”

– இவ்வாறு ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் உத்தியோகபூர்வ பேச்சாளருமான சுரேஷ் க. பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் வடக்கு மாகாண விஜயம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையின் முழு விபரம் வருமாறு:–

“இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது இரண்டாவது ஆண்டின் தொடக்கத்தில் வடக்கு மாகாணத்தின் அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்டு, மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டங்களை நடத்துவதற்காகவும், ஏனைய சந்திப்புக்களை நிகழ்த்துவதற்காகவும் வடக்கு மாகாணத்திற்குக் கடந்த 4 ஆம் திகதி முதல் 8 ஆம் திகதி வரை விஜயத்தை மேற்கொண்டிருந்தார்.

அவரது வருகை தொடர்பாகத் தமிழ் மக்கள் மத்தியில் பல்வேறுபட்ட எதிர்பார்ப்புகள் இருந்தன. மிச்சம் மிகுதியாக உள்ள அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும். காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான முடிவுகள் எட்டப்பட வேண்டும், காணிகள் முழுமையாக விடுவிக்கப்பட வேண்டும். 13 ஆவது திருத்தம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டு மாகாண சபைத் தேர்தல் நடைபெற வேண்டும்.

பௌத்த சிங்களமயமாக்கலை நோக்கமாகக் கொண்டு தமிழர் பிரதேசங்களில் பலாத்காரமாக நிர்மாணிக்கப்படும் பௌத்த கோயில்களின் பணிகள் நிறுத்தப்பட வேண்டும்.

இவை தொடர்பில் ஜனாதிபதி தெளிவான பதிலை அளிப்பார் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அவர் தமது விஜயத்தின்போது மேற்குறிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எந்தவிதமான ஆக்கபூர்வமான கலந்துரையாடல்களையோ தெளிவுபடுத்தல்களையோ மேற்கொள்ளவில்லை.

அவர் தொடர்ச்சியாகப் பேசி வரும் அபிவிருத்தி தொடர்பில் மாத்திரமே பேசினார். இதற்கு முன்னரும் அபிவிருத்தி தொடர்பில் அவர் பல்வேறு கருத்துகளைக் கூறியிருக்கின்றார். ஆனால், அவற்றுக்கான முறையான நிதி ஆதாரங்கள் கிடைக்கவில்லை என்ற குற்றச்சாட்டு இந்த அரசின் மேல் தொடர்ச்சியாக இருந்து வருகின்றது.

ஜனாதிபதிக்கும் சிங்கள அரசியல் தலைமைகளுக்கும் கடந்தகாலத்தை நினைவுபடுத்த விரும்புகின்றோம். யுத்தத்திற்கு முன்பாக, முழு இலங்கைக்கும் தேவையான விவசாய உற்பத்திகளையும் கடல் உணவுகளையும் வடக்கு–கிழக்கு மாகாணங்கள் பெருமளவில் வழங்கி வந்தன. முப்பது வருட யுத்தத்தில் எமது விவசாயம் முற்றாக அழிக்கப்பட்டது. மக்கள் இடம்பெயர்ந்தார்கள். விவசாயக் காணிகள் தரிசு நிலங்களாகவும் காடாகவும் மாறின. இருந்த ஒருசில தொழிற்சாலைகளும் யுத்தத்தைக் காரணம் காட்டி அழித்தொழிக்கப்பட்டன. முழு இலங்கைக்கும் உணவளித்த மக்கள் தமக்கே வாழ்வாதாரம் இல்லாத ஒரு நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். இவர்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் செய்து, அந்த மக்கள் பொருளாதாரத்தில் முன்னேறுவதற்கு வழிசமைத்துக் கொடுக்க வேண்டிய அரசு அது தொடர்பில் எத்தகைய பிரத்தியேக நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை. அதுமட்டுமன்றி, காடாக மாறியுள்ள அவர்களது காணிகளை விடுவிப்பதற்கே அவர்கள் கடந்த பதினான்கு வருடங்களாகப் போராடி வருகின்றனர்.

இந்த இலட்சணத்தில்தான், சிங்கள அரசின் செயற்பாடு இருக்கின்றதென்பதை ஜனாதிபதி புரிந்துகொள்ள வேண்டும். யுத்தத்திற்குப் பின்னர், வடக்கு – கிழக்கு தமிழ் மக்கள் அரசின் உதவிகள் ஏதுமின்றி, தமது வாழ்வாதாரத்தையும் வாழ்க்கை முறையையும் தாமே கட்டியெழுப்பிக்கொள்வதற்காக வைராக்கியத்துடன் தொடர்ந்தும் போராடி வருகின்றனர்.

யதார்த்தங்கள் இவ்வாறிருக்கையில், ஜனாதிபதி குறிப்பிடுகின்ற வடக்கு மாகாண அபிவிருத்தி என்பது எவ்வளவு தூரம் சாத்தியம் என்பதை நாங்கள் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

அதேசமயம், தமிழ்க் கட்சிகள் முன்வைத்த 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்தி தமிழ் மக்களின் அரசியல், சமூக, பொருளாதார அபிலாஷைகளை நிறைவேற்றுவது தொடர்பில் எந்த விதமான ஆணித்தரமான பதில்களும் அளிக்காமல் 13 ஆவது திருத்தம் என்பது பொருளாதார அபிவிருத்திக்குப் போதுமானது என்ற கருத்தை மாத்திரம் கூறிச் சென்றிருக்கின்றார்.

13 ஆவது திருத்தம் என்பது, இந்திய – இலங்கை ஒப்பந்தத்தின் பிரகாரம், தமிழ் மக்களுடன் அதிகாரங்களைப் பகிர்ந்துகொள்வதற்காக உருவாக்கப்பட்ட மாகாண சபைகளுக்கான அதிகாரங்களை மையமாகக் கொண்டது. கடந்த ஐந்து வருடங்களுக்கு மேலாக மாகாண சபைத் தேர்தலை நடத்தாமல் இருப்பதுடன், 13 அவனது திருத்தத்தினூடாக மாகாணங்களுக்கு வழங்கப்பட்ட பல அதிகாரங்கள் மீளவும் மத்திய அரசால் பறிக்கப்பட்டும் இருக்கின்றது.

இலங்கையின் அரசியல் ஸ்திரத்தன்மைக்கும், பொருளாதார அபிவிருத்திக்கும் தமிழ்த் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பது முக்கியமானது. இவை இல்லாமல், நாட்டின் பொருளாதார அபிவிருத்தி என்பது ஒருபோதும் சீராக நடைபெறாது. வெளிநாட்டு முதலீடுகளையும் அரசு எதிர்பார்க்க முடியாது.

இதனைப் புரிந்துகொண்டு மாகாண சபைத் தேர்தலை நடத்தி, அதற்குரித்தான முழுமையான அதிகாரங்களை வழங்கி, சர்வதேச முதலீடுகளைக் கொண்டு வருவதற்கான அதிகாரங்களை மாகாண அரசுகளுக்கு வழங்குவதன் மூலமே இலங்கையின் பொருளாதாரமும் அரசியல் ஸ்திரத்தன்மையும் வலுவடையும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கொழும்பிலும் சரி, யாழ்ப்பாணத்திலும் சரி புலம்பெயர் தமிழ் மக்களின் முதலீடுகள் அவசியம் என்பதை மீண்டும் மீண்டும் கூறி வருகின்றார். கடந்த காலங்களில் தென்பகுதியிலிருந்த தமிழ் மக்களின் பொருளாதாரம் என்பது அடிக்கடி அரசு உருவாக்கிய இனக்கலவரங்களினால் நிர்மூலம் செய்யப்பட்டது.

இதன் காரணமாக, பல இலட்சம் கோடி மதிப்புள்ள சொத்துகளை தமிழ் மக்கள் இழந்து அகதிகளாகக் கப்பலேற்றி அனுப்பப்பட்ட வரலாறுகள் தமிழ் மக்களுக்குண்டு. இவ்வாறான ஒரு சூழ்நிலையில், புலம்பெயர் தமிழ் மக்களின் முதலீடுகளுக்கு எவ்வித பாதுகாப்பும் இல்லாமல், அவற்றை எதிர்பார்ப்பதென்பது தமிழ் மக்களை மேலும் மேலும் முட்டாள்கள் என்று நினைப்பதற்கு ஒப்பாகும்.

மாகாணங்களுக்கென ஒதுக்கப்பட்ட பொலிஸ் அதிகாரங்கள், காணி அதிகாரங்கள் போன்றவற்றை வழங்கி, அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான அதிகாரங்களையும் மாகாணங்களுக்கு வழங்கி, சர்வதேச முதலீடுகளைக் கொண்டுவருவதற்கான அதிகாரங்களை மாகாணங்களுக்கு வழங்குவதனூடாகத்தான் புலம்பெயர் தமிழர்களின் முதலீடுகளுக்குப் பாதுகாப்புக் கிட்டும் என்பதை ஜனாதிபதியும் அவருடைய தலைமையிலான அரசும் புரிந்துகொள்ள வேண்டும். இதை வழங்குவதனூடாக ஜனாதிபதி குறிப்பிடும் வடக்கைப் பொருளாதார மையமாக மாற்றலாம் என்பது மட்டுமன்றி, தென் ஆசியாவின் நிதி ஆதார மையமாகவும் மாற்ற முடியும்.

இவை ஒருபுறமிருக்க, யுத்தம் முடிவுற்று பதினான்கு வருடங்கள் கடந்த நிலையில், தமிழ் மக்கள் தமது காணிகளை முழுமையாக விடுவிக்கக் கோரி வருகின்ற போதிலும், இன்னமும் அது முழுமையடையவில்லை. இப்போதும்கூட இடம்பெயர்ந்த மக்கள் யாழ்ப்பாணத்தில் முகாம்களிலும் உறவினர் வீடுகளிலும் வாடகை வீடுகளிலும் வாழ்ந்து வருகின்றனர்.

இவர்களது நிலங்கள் காணிகளை முப்படையினரும் பலாத்காரமாக தம்வசம் வைத்திருக்கின்றனர். அவை விடுவிக்கப்பட வேண்டுமாயின், ஜனாதிபதிதான் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமே தவிர, மாவட்ட செயலாளர்களோ ஏனைய அதிகாரிகளோ எடுக்க முடியாது.

2025 ஆம் ஆண்டுக்குள் மீள்குடியேற்றம் முழுமைபெற வேண்டும் என்று கூறும் ஜனாதிபதி, காணிகளை விடுவிப்பதற்கான ஆக்கபூர்வமான அறிவுறுத்தல்களோ நடவடிக்கைகளோ எடுக்கவில்லை என்பதுதான் யதார்த்தமானது. இத்தகைய சூழ்நிலையில், அவர் குறிப்பிட்ட காலத்திற்குள் மீள்குடியேற்றங்கள் பூரணப்படுத்தப்படுமா என்ற கேள்வி எழுகின்றது.

அதனைப் போலவே காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாக யுத்தம் முடிந்த காலத்திலிருந்து இன்று வரை அந்த மக்கள் போராடி வருகின்றபோதிலும்கூட அவர்களைச் சந்தித்துப் பேசுவதற்கோ அல்லது அவர்களுக்கு நம்பிக்கை அளிக்கும் விதத்திலோ எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்பதுடன், ஜனாதிபதியைச் சந்திக்க முயற்சித்த தாய்மார்களைக் கைது செய்து சிறையில் அடைத்தது என்பது மிக மோசமான செயற்பாடாகும்.

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் நீண்ட போராட்டத்திற்கு மதிப்பளிக்காதது மட்டுமல்ல அவர்களது உறவினர்களின் இருப்பு தொடர்பில் அவர்கள் அறிந்துகொள்வதற்கான நீதியும் தொடர்ந்து மறுக்கப்பட்டு வருகின்றது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இத்தகைய வார்த்தை ஜாலங்கள் தமிழ் மக்களை ஏமாற்றுவதற்கான ஒரு முயற்சியாகத் தென்படுகிறதே தவிர, ஜனாதிபதியின்மீதோ அவரது தலைமையின் மீதான அரசின் மீதோ நம்பிக்கை கொள்வதற்கு இடமளிக்கவில்லை. அரசின் இவ்வாறான தொடர் நடவடிக்கைகள்தான் தமிழ் மக்கள் ஒரு பொது வேட்பாளரை நிறுத்துவதற்கான சூழ்நிலையை நிர்ப்பந்தித்துள்ளது.” – என்றுள்ளது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## அருணாசலத்தை அறியாதவர்!

யதார்த்தப் புற நிலைமைகளையும், அரசியல் உண்மைகளையும் தம்மிஷ்டத்துக்கு வளைத்து, புரட்டிப்போட்டு, புதிய அரசியல் பாடம் புகட்டுவதில் நமது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு நிகர் வேறு யாருமில்லை என்பது உண்மை.

அரசமைப்பில் புதிய திருத்தத்தின் மூலம் சேர்த்துக் கொள்ளப்பட்ட 13 ஆவது திருத்தத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கு நாடாளுமன்றத்தின் அனுமதி பெறப்பட வேண்டும் என்று 'புதிய அரசியல் பாடம்' ஒன்றை தமிழ் மக்களுக்கு புகட்டிய அதிமேதாவி அல்லவா அவர்?

இப்போது தமிழர் பிரதிநிதியாக இருந்த சேர் பொன். அருணாசலத்தின் நினைவு தின நிகழ்வில் நேற்று புதிய அரசியல் கயிறு ஒன்றை அவர் தம் எண்ணப்படி - தம்மிஷ்டப்படி அவிழ்த்துவிட்டு இருக்கின்றார்.

சுதந்திரமான தேசத்தைக் கட்டியெழுப்ப, சேர்.பொன் அருணாச்சலத்தின் 'இலங்கையர்' என்ற எண்ணக்கருவை 'இலங்கையர்களின் தேவைகள்' என்ற வகையில் மேம்படுத்த அர்ப்பணிப்புடன் தான் செயற்படுகின்றார் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்றுத் தெரிவித்திருக்கின்றார்.

அந்த வேலைத்திட்டத்தைப் பலப்படுத்தும் வகையில் யுத்தம் சார்ந்த பிரச்சினைகள் அனைத்துக்கும் 2025இற்குள் தீர்வு காணத் தாம் எதிர்பார்க்கின்றார் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறியிருக்கின்றார்.

சேர்.பொன்.அருணாசலம் தமிழ், சிங்கள, முஸ்லிம் என்று அல்லாமல் இலங்கையர் என்ற எண்ணக்கரு தொடர்பில் அதிக நம்பிக்கை கொண்டிருந்தார் என்று குறிப்பிட்டு, அதை நினைவுகூர்ந்த ஜனாதிபதி, அந்தக் கொள்கையை பின்பற்றிய டீ.எஸ்.சேனநாயக்க அனைத்து இனத்தவரையும், மதத்தவரையும் ஒன்றிணைத்துக்கொண்டு நாட்டின் முன்னேற்றத்திற்கு வழிவகுத்தார் என்றும் கதை விட்டிருக்கின்றார்.

சேர் பொன் அருணாசலம் இலங்கையர் என்ற பொதுவான அடையாளத்தை ஆரம்பத்தில் நம்பினார் என்பது உண்மைதான். அதனை மாத்திரமல்ல, இந்த நாட்டின் பெரும்பான்மையினரான சிங்களவர்களும் அப்படித்தான் தமிழர்களையும் சேர்த்து இலங்கையர்களாகச் சிந்திப்பார்கள் என்றும் கூட முழுமையாக நம்பினார். கடைசியில் நம்பி ஏமாந்து, மனம் நொந்து, தமது நம்பிக்கை தகர்ந்து, அவர் மனம் குறுகிப் போனார் என்பதே சரித்திர உண்மை. நிஜம்.

1919 டிசம்பர் 11 இல் அருணாசலத்தின் முயற்சியினால்தான் இலங்கையின் முதலாவது தேசிய இயக்கமான 'இலங்கைத் தேசிய காங்கிரஸ்' உருவாக்கப்பட்டது. அதன் முதலாவது தலைவராகவும் 1919 முதல் 1922 வரை பொன்னம்பலம் அருணாசலமே ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார். அப்போது தாம் 'இலங்கையர்' என்ற சிந்தனை மட்டுமே அவரிடம் இருந்தது. அவர் பிரித்துப் பார்க்கவில்லை. சிங்களவரையும் சக இலங்கையராக நம்பி சகோதரனாக அரவணைத்துக் கொண்டார்.

தமிழர்களை தேசிய காங்கிரஸுடன் இணைப்பதற்கான பேச்சுகளில் தாமே நடுவராக முன்னின்று தொழிற்பட்டார். அதற்கான எழுத்து வடிவில் ஒப்பந்தம் ஒன்றும் கூட கையெழுத்திடப்பட்டது.

ஆனால் அப்போதே - வெள்ளையரின் ஆட்சிக் காலத்திலேயே - சிறுபான்மையினரை நம்ப வைத்து, கழுத்தறுத்து, ஏமாற்றும் தந்திரத்தை சிங்களப் பேரினவாதம் கட்டவிழ்த்த போதுதான் அவருக்கு சிங்களத்தின் சின்னத்தனம் - நம்ப வைத்து ஏமாற்றும் பரவணிப் பண்பியல்பு - முழுமையாகப் புரிந்தது.

1921 ஆம் ஆண்டு மானிங் அரசியல் சீர்திருத்தத்தின் அடிப்படையிலான தேர்தலில் பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் முறை இனவிகிதாசாரப் படி இருக்கவேண்டும் என்ற போதிலும், கொழும்பு தமிழ்ப் பிரதிநிதித்துவ விடயத்தில் சேர். ஜேம்ஸ் பீரிஸ், சமரவிக்கிரம போன்ற சிங்களத் தலைவர்கள் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை. நம்ப வைத்து ஏமாற்றினர். சிங்களவர் தங்களைத் தெரிவு செய்யமாட்டார்கள் என்பதனைப் புரிந்து கொண்டு இலங்கைத் தேசிய காங்கிரஸிலிருந்து அருணாசலம் வெளியேறினார். 1921 ஒகஸ்டில் தமிழர் அடையாள அரசியலை நிலைநிறுத்தும் வகையில் 'தமிழர் மகாஜன சபை'யை அவர் உருவாக்கினார். அதன் தலைமைப் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டார்.

ஆக, சிங்களப் பேரினத்தவருடன் இலங்கையர் என்ற ஒற்றை நாமத்தில் ஐக்கியமாக வாழவே முடியாது என்பதை முதலில் நம்பி நடந்து, பரீட்சித்துப் பார்த்து, ஏமாந்து கையைச் சுட்டுக்கொண்டு, அப்படி இலங்கையர் என ஐக்கியமாக வாழ முடியாது, தமிழர் என்ற தனித்துவ அடையாளத்துடன் எம்மை நிலை நிறுத்துவதே எமக்கு ஒரே வழி என்ற முடிவுக்கு வந்த சேர் பொன்.அருணாசலத்தின் செயற்பாட்டை - கோட்பாட்டை - தனது தேவைக்கு ஏற்ப தலைகீழாக வளைக்கின்றது கிழட்டு அரசியல் நரியான ரணில் விக்கிரமசிங்கவின் தந்திரப் புத்தி!

# கல்முனை சுகாதார பணிமனையில் டாக்டர் ஹில்மிக்குப் பாராட்டு நிகழ்வு




**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் சுமார் 09 மாதங்கள் பொது சுகாதாரம் மற்றும் தர முகாமைத்துவ பிரிவுகளின் பொறுப்பு வைத்திய அதிகாரியாக கடமையாற்றி பிராந்திய சுகாதாரத் துறைக்கு அளப்பெரிய சேவையாற்றியமைக்காக சாய்ந்தமருதைச் சேர்ந்த டாக்டர் எம்.ஏ.எம்.ஹில்மி, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் உத்தியோகத்தர்கள், ஊழியர்களால் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார்.

பொது சுகாதார மற்றும் தர முகாமைத்துவ பிரிவுகளின் பொறுப்பு வைத்திய அதிகாரியாக கடமையாற்றிய டாக்டர் எம்.ஏ.எம்.ஹில்மி சமூக வைத்திய நிபுணர் பட்டமேற்படிப்புக்காகச் செல்வதை முன்னிட்டு இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சகிலா இஸ்ஸடீன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிராந்திய பிரிவுத் தலைவர்கள், பிராந்திய பணிமனையின் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



# தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்ட மாணவன்!

## அநுராதபுரத்தில் வீடொன்றில் சம்பவம்

அநுராதபுரத்தில் வீடொன்றில் தூக்கில் தொங்கிய நிலையில் 15 வயதான பாடசாலை மாணவனின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் பொலிஸ் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நேற்று பிற்பகல் மாணவர் தனது வீட்டில் உள்ள அறையில் உறங்கிக் கொண்டிருந்தார் என்று கூறப்பட்டது. இந்த நிலையில் படுக்கையின் மேற் கூரையில் தூக்கில் தொங்கிய நிலையில் இந்த சடலம் மீட்கப்பட்டள்ளது.

4 சகோதர, சகோதரிகள் உள்ள குடும்பத்தில் இளையவரான மாணவனின் உடலில் பல இடங்களில் கீறல் காயங்கள் உள்ளன என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பொலிஸார் நடத்திய சோதனையில், இறந்த மாணவனின் படுக்கையின் மெத்தையின் கீழ், போதைப் பொருள் வகை, தீப்பெட்டி, சிம் அட்டைகள், இரண்டு கையடக்கத் தொலைபேசிகள் என்பன கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

மேலதிக விசாரணைகளுக்காக அவற்றை பொலிஸார் கொண்டு சென்றுள்ளனர்.

மரணம் தொடர்பான நீதிவான் விசாரணையின் பின்னர், சடலத்தை பிரேதப் பரிசோதனை செய்யுமாறு பதில் நீதிவான் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

பிரேத பரிசோதனைக்காகச் சடலத்தை தம்புள்ளை பொது வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்குமாறும் நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

# ஹட்டன் பஸ் நிலையத்தின் பல சேவைகள் நிறுத்தம்!

## பெரும் சிரமத்தின் மத்தியில் மக்கள்



**(மஸ்கெலியா நிருபர்)**

அதிகாலை வேளையில் கடந்த 50 ஆண்டு காலம் சேவையில் ஈடுபட்டு வந்த சாமிமலை – கண்டி அரச பஸ் சேவைகள் கடந்த பல மாதங்களாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

இதனால் இந்தப் பகுதியில் உள்ள அனைத்து மக்களும் பாரிய அளவில் சிரமத்துக்கு ஆளாகி வருகின்றனர்.

நாவலப்பிட்டி, கம்பளை, பேராதெனிய, கண்டி வைத்திய சாலைக்கு செல்லும் நோயாளிகள் மற்றும் பாடசாலை மாணவர்கள், பயணிகள் இவ்வாறு சிரமத்துக்கு உள்ளாகி வருகின்றனர்.

சிவனொளிபாத மலையில் இருந்து கதிர்காமம்வரை சேவையில் ஈடுபட்டு வந்த ஹட்டன் அரச பஸ் சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளது. நுவரெலியா ஹட்டன், ஹட்டன் கதிர்காமம் என்ற சேவை ஆரம்பிக்க பட்டுள்ளது. நல்லதண்ணி – கதிர்காமம் சேவை இடை நிறுத்தப்பட்டுள்ளது.

ஹட்டன் பஸ் நிலையம் நடத்திய மஸ்கெலியா அம்பாறை சேவைகள் இடை நிறுத்தப்பட்டுள்ளன. ஹட்டன் அரச பஸ் நிலையம் நடத்திய மஸ் கெலியா – திருகோணமலை சேவைகள் இடை நிறுத்தப்பட்டுள்ளன.

இவ்வாறு பல சேவைகள் இடை நிறுத்தப்பட்டுள்ளதால் பாடசாலை மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று முறைப்பாடு தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் சம்பந்தப்பட்ட ஹட்டன் அரச பஸ் நிலைய அதிகாரியிடம் கேட்ட போது,

“பஸ்கள் இருந்த போதிலும் நடத்துனர், சாரதிகள், பழுது பார்த்தல் சேவைகள் ஆகியவற்றுக்கு வெற்றிடம் நிலவுகிறது.

இது குறித்து உயர் மட்ட அதிகாரி கவனத்துக்குக் கொண்டு சென்ற போதும் பலன் இல்லை என்று கூறினார்.

நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்கள் உடன் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

கடந்த காலங்களில் இருந்தவாறு சேவைகள் இடம்பெற வேண்டும். நெடுந்தூர, குருந்தூர சேவைகள் உரிய வகையில் நடத்தப்பட வேண்டும் என்று மக்கள் தெரிவித்துள்ளனர்.

# சந்நிதியான் ஆச்சிரமத்தால் அம்பாறையில் நிவாரண உதவி

## 4 லட்சத்து 25 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் வழங்கப்பட்டன





அம்பாறை மாவட்டத்தில் தொடர் மழையால் ஏற்பட்டுள் வெள்ளப் பெருக்குக் காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு வடமராட்சி தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரமத்தால் பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் கடந்த வாரம் 4 லட்சத்து 2 ஆயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

அம்மாறை மாவட்டத்தின் லகுகல பிரதேச செயலர் பிரிவிலுள்ள பாணம வடக்கு கிராமசேவையாளர் பிரிவிலுள்ள 62 குடும்பங்களுக்கும், பாணம கிழக்கு கிராமசேவையாளர் பிரிவிலுள்ள 35 குடும்பங்களுக்கும் இந்த உலர் உணவு பொதிகள் வழங்கப்பட்டுள்ளன.

நிவாரணப் பணிகளை ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் நேரடியாகச் சென்று வழங்கி வைத்தார்.

# ஆறாவது ஆண்டின் நீங்காத நினைவலைகளில்...!

**10.01.2024**

மண்ணில்
16 . 12 . 1967



விண்ணில்
10 . 01 . 2018

பேராசிரியர் கலாநிதி

## ஜோன் மனோகரன் கென்னடி விஜயரத்தினம்

(முன்னாள் விரிவுரையாளர் - ஆங்கில இலக்கியம், தென்கிழக்கு, கிழக்குப் பல்கலைக்கழகம், பேராசிரியர் - எதியோப்பியப் பல்கலைக்கழகம், எதியோப்பியா)

கென்னடி!
காரைநகர் கண்ட கவித்துவமேதை
அகிலம் போற்றிடும் அறிவாளன்
ஒப்பற்ற சிந்தனையாளன்
தன்னலமற்ற தொண்டு புரிந்தவன்
தனித்தன்மை கொண்டவன்
தன் சிந்தனைப் பேச்சால் மக்களைக் கவர்ந்தவன்
மறக்கமுடியாத ஒரு இளம் காவியம்!
வருங்கால இளைஞர்களின் முன்னோடி!
கென்னடி ஒரு தனி சகாப்தம்!
காரைநகர் சிவனின் பாதமலர் சேர்ந்தாயோ?

**கென்னடியின் உதிர்வு**
**எமது மண்ணுக்கும், இனத்துக்கும் பேரிழப்பாகும்.....**
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

'சண்முகனின் வாசம்',
நீலிப்பந்தனை, காரைநகர்.

குடும்பத்தினர்,நண்பர்கள், உறவினர்கள்,
ஆசிரியர்கள், புலம்பெயர் வாழ் நண்பர்கள்.

# வரி செலுத்தத் தவறிய வர்த்தகர் தொடர்பில் ஆய்வு செய்யக் குழு!

வரி செலுத்தத் தவறிய வர்த்தகர்கள் தொடர்பில் ஆய்வு செய்யக் குழு ஒன்றை நியமிக்க உள்நாட்டு இறை வரித் திணைக்களம் முடிவு செய்துள்ளது.

இவ்வாறான வர்த்தகர்கள் வரி செலுத்தாததற்கான காரணங்களை உரிய குழு ஆராயும் என்று உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம் செபாலிகா சந்திரசேகர தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பதிவு செய்து வரி செலுத்தாத வர்த்தகர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்படுவார்கள் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையில், மாதத்துக்கு ஒரு லட்சம் ரூபாவுக்கு மேல் சம்பாதிக்கும் 18 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் தங்கள் வரிக் கோப்புகளைத் திறக்கத் தொடங்கியுள்ளனர் என்று அவர் கூறியுள்ளார்.

மேலும், ஆண்டுக்கு 12 லட்சத்துக்கு மேல் வருமானம் ஈட்டுபவர்கள் வரி செலுத்த வேண்டும் என்றும், ஏனைய நபர்கள் வரி செலுத்தும் அடையாள எண்ணைப் பெற வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# வற்வரி செலுத்துவோர் பங்களித்தால் அறவிடும் வீதத்தைக் குறைக்க முடியும்

## அமைச்சர் பந்துல குணவர்தன ஆலோசனை



வற் வரி செலுத்த வேண்டியவர்கள் அதிகம் பங்களித்து உரிய முறையில் வரியைச் செலத்துவதன் மூலம், உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துக்கு வற்வரி அறவிடும் சதவீதத்தைக் குறைக்க முடியும் என்று அமைச்சரவைப் பேச்சாளரும், வெகுஜன ஊடகத்துறை அமைச்சருமான பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று (09) நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக வியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இந்த விடயத்தைக் கூறியுள்ளார்.

வற்வரி சதவீத குறைப்புத் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வற்வரி செலுத்துபவர்கள் அனைவரும் வரி கோப்புக்களை வைத்திருந்தால் மற்றும் வற்வரி செலுத்தும் ஒவ்வொரு வியாபாரிகளும் தாம் செலுத்த வேண்டிய வரித் தொகையை செலுத்தினால், கிடைக்கப் பெறும் வருமான அதிகரிப்பின் ஊடாக வற் வரி செலுத்த வேண்டிய சதவீதத்தை குறைக்க முடியும்.

உள்நாட்டு இறைவரித் திணைக்களம் உரிய தகவல்களை உடனடியாக அறிவிக்கும் முறைமை ஒன்றை ஆரம்பித்து இது தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.- என்றார்.

# சர்வதேச நாணய நிதியக் குழுவினர் இன்று இரவு இலங்கைக்கு விஜயம்

சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழுவொன்று இன்று இரவு இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளது என்று நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

மேற்படி பிரதிநிதிகள் நாளை (11) முதல் 17 ஆம் திகதி வரை நாட்டில் தங்கியிருப்பார்கள் என்றும் நிதி அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைப் பொருளாதாரத்தின் அண்மைக்காலப் போக்குகளை ஆராய்வதற்காக இந்தக் குழு விஜயம் செய்யவுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து கடன் வசதிகளைப் பெற்றுக் கொண்ட பின்னர், நாட்டின் பொருளாதார சீர்திருத்த நடவடிக்கைகள் தொடர்பான ஆய்வுகளும் மேற்படி குழுவால் மேற்கொள்ளப்படும் என்றும் நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதனைத் தொடர்ந்து ஜனாதிபதி, பிரதமர், நிதி அமைச்சர் மற்றும் மத்திய வங்கி அதிகாரிகளுடன் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் கலந்துரையாடல்களை முன்னெடுப்பார்கள் என்றும் எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

# 24 மணி நேரத்தில் 999 பேர் சிக்கினர்



நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் விசேட சோதனை நடவடிக்கையின் கீழ், இன்று அதிகாலை 12.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் 999 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களில் 31 பேர் தடுப்புக் காவல் உத்தரவின் கீழ் விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்றனர் என்று பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

கைதானவர்களில் போதைப் பொருட்களுக்கு அடிமையான 26 பேர் புனர்வாழ்வு மையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், குறித்த காலப்பகுதியில், 306 கிராம் ஐஸ் போதைப்பொருள், 453 கிராம் ஹெரோயின், 57 கிலோ கிராம் கேரள கஞ்சா உள்ளிட்ட பல போதைப்பொருட்களும் மீட்கப்பட்டுள்ளன.



# இன்று காலை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட திருமலை வைத்தியசாலை ஊழியர்கள்!






**(எஸ்.கீதபொன்கலன்)**

திருகோணமலை வைத்தியசாலையில் நீண்ட காலமாக நிலவும் ஊழியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யக் கோரி வைத்தியசாலை ஊழியர்கள் இன்று காலை (10) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



# தென் கிழக்கு பல்கலைக்கழக ஒலுவில் வளாகத்தில் வெள்ளம்!

## 16 ஆம் திகதிவரை மூடப்பட்டது

**(வி.ரி. சகாதேவராஜா)**

இன்று (10) கொட்டித்தீர்த்த கனமழை மற்றும் வெள்ளத்தால் தென் கிழக்குப் பல்கலைக்கழக ஒலுவில் வளாகச் சுற்று வட்டாரத்தில் வெள்ளநீர் நிரம்பியுள்ளது.

வெள்ளம் காரணமாக இன்று புதன்கிழமை (10) முதல் தென் கிழக்குப் பல்கலைக் கழக ஒலுவில் வளாகத்தின் சகல பீடங்களின் கல்வி நடவடிக்கைகளும் எதிர்வரும் 16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமைவரை மூடப்பட்டுள்ளது என்று தென் கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் ரமீஸ் அபூபக்கர் தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக நிர்வாக நடவடிக்கைகள் மற்றும் தென்கிழக்குப் பல்கலைக்கழக பிரயோ விஞ்ஞான பீட சம்மாந்துறை வளாகக் கல்வி நடவடிக்கைகள் இடம்பெறும் எனவும் தெரிவித்துள்ளார்.

இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழி பீடம், கலை கலாசார பீடம், தொழில்நுட்ப பீடம், பொறியியல் பீடம், வர்த்தக முகாமைத்துவ பீடம் ஆகியவை மூடப்பட்டுள்ளன.

அம்பாறை சேனாநாயக்கவின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளதால் தென்கிழக்குப் பல்கலைக்கழக ஒலுவில் வளாக சூழலில் வெள்ள நிலை ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# யுனெஸ்கோ உலக பாரம்பரியக் குழுவின் அமர்வுக்கு தலைமை தாங்குகிறது இந்தியா!




இந்த ஆண்டு இடம்பெறவுள்ள யுனெஸ்கோவின் உலக பாரம்பரியக் குழுவின் 46 வது அமர்வுக்கு இந்தியா தலைமை தாங்கி தொகுத்து வழங்க வுள்ளதாக யுனெஸ்கோவுக்கான இந்தியாவின் நிரந்தரப் பிரதிநிதி விஷால் விஷர்மா தெரிவித்துள்ளார்.

அதன்படி, இந்த ஆண்டில் ஜூலை 21 முதல் ஜூலை 31 வரை யுனெஸ்கோவின் உலக பாரம்பரியக் குழுவின் 46 வது அமர்வு இடம்பெறவுள்ளது.

மேலும், இந்த அமர்வை இந்தியா நடத்துவதும், தலைமை தாங்குவதும் இதுவே முதல் முறை ஆகும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

யுனெஸ்கோவின் உலக பாரம்பரியக் குழு அமர்வு ஒவ்வொரு ஆண்டுக்கு ஒருமுறை நடைபெறும், மேலும், உலக பாரம்பரிய மாநாட்டை செயற்படுத்துவது இந்த குழுவின் பொறுப்பாகும்.

இந்த மாநாடு உலக பாரம்பரிய நிதியின் பயன்பாட்டை வரையறுத்து மாகாணக் கட்சிகளுக்கு அவர்களின் கோரிக்கையின் பேரில் நிதி உதவியை வழங்க வழிவகுக்கும்.

மேலும், அபாயகரமான நிலையில் உள்ள உலகப் பாரம்பரியச் சின்னங்களின் பட்டியலில் இருந்து சொத்துகளைச் சேர்ப்பது அல்லது நீக்குவது தொடர்பான முடிவுகள் குறித்தும், உலகப் பாரம்பரியப் பட்டியலில் புதிய சின்னம் சேர்க்கப்படுமா என்பது குறித்தும் இறுதிக் கருத்தை இந்த ஆணையம் வெளியிடும்.

தவிரவும் உலக பாரம்பரியக் குழுவானது 21 மாநிலக் கட்சிகளைக் கொண்டுள்ளது, ஆறு வருடத்திற்கு ஒரு முறை பொது தேர்தல் மூலம் இவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

தற்போதைய உலக பாரம்பரியக் குழுவில் 21 மாநிலக் கட்சிகள் காணப்படுகின்றன, அதில், அர்ஜென்டினா, பெல்ஜியம், பல்கேரியா, கிரீஸ், இந்தியா, இத்தாலி, ஜமைக்கா, ஜப்பான், கஜகஸ்தான், கென்யா, லெபனான், மெக்ஸிகோ, கட்டார், தென் கொரியா, ருவாண்டா, செயின்ட் வின்செண்ட் மற்றும் கிரெனடைன்ஸ், செனகல் , துருக்கி, உக்ரைன், வியட்நாம் மற்றும் ஜாம்பியா இருக்கின்றன.

யுனெஸ்கோவின் உலக பாரம்பரியக் குழு ஆண்டுதோறும் 7 மாநிலக் கட்சிப் பணியகத்தைத் தேர்ந்தெடுக்கிறது, இது குழுவின் பணியை ஒருங்கிணைக்க, கூட்டம் நடைபெறும் திகதி, நேரம் ஆகியவற்றை நிர்ணயிக்க உதவுகிறது.

யுனெஸ்கோவின் இந்த அமைப்புக்கு ஒரு தலைவர், ஐந்து துணைத் தலைவர்கள் மற்றும் ஒரு அறிக்கையாளர் ஆகியோர் உள்ளனர்.

இந்த ஆண்டு நடைபெறவுள்ள 46 ஆவது அமர்விற்கு, பணியகத் தின் தலைவராக இந்தியா தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது.

# பிரபல பாடகர் உஸ்தாத் ரஷித் புற்றுநோயினால் உயிரிழப்பு

இந்தியாவின் பிரபல பாடகர் உஸ்தாத் ரஷித் கான் தனது 55 ஆவது வயதில் காலமானார்.

உஸ்தாத் ரஷித் கான் புற்றுநோயினால் பாதிக்கப்பட்ட நிலையில், கடந்த சில நாள்களாக கொல்கத்தாவில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார்.

இந்த நிலையில், அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

உஸ்தான் ரஷித் கானின் மரணத்திற்கு மேற்கு வங்க முதலமைச்சர் மம்தா பேனர்ஜி இரங்கல் தெரிவித்துள் ளார்.

அத்துடன், அவரது இறுதி சடங்கில் துப்பாக்கி குண்டுகள் முழங்க அரச மரியாதை வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.



# சபரிமலையில் வரலாறு காணாத கூட்ட நெரிசல்!



சபரிமலை ஐயப்பன் கோயில் மண்டல பூஜைக்காக கடந்த நவம்பர் 16 ஆம் திகதி நடை திறக்கப்பட்டது. தற்போது தினமும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் தரிசனம் செய்து வருகின்றனர்.

பக்தர்கள் கூட்டம் முந்தைய ஆண்டுகளைவிட அதிகமாக உள்ளது. இதனால் நீண்ட நேரம் காத்திருக்கும் நிலை ஏற்பட்டதால், பக்தர்கள் பலர் கோயிலுக்குச் செல்ல முடியாமல் திரும்பி விடுகின்றனர் என கூறப்படுகிறது.

இதற்கிடையே சபரிமலை செல்ல முடியாத பக்தர்கள் பலர், சென்னை மடிப்பாக்கம் ஐயப்பன் கோயிலில் சுவாமி தரிசனம் செய்து, விரதத்தை நிறைவு செய்கின்றனர்.

இதுகுறித்து ஸ்ரீஜயப்பன் கோயில் அறக்கட்டளை வெளியிட்ட அறிக்கையில்,

"இந்த ஆண்டு சபரிமலையில் அபரிமிதமான பக்தர்களின் கூட்டம் காணப்படுகிறது. இதனால் குழந்தைகள், பெண்கள் மற்றும் முதியோர் உட்பட பலர் ஐயப்பனை தரிசிக்க முடியாமல் திரும்பி விடுகின்றனர்.

அவ்வாறு ஐயப்பனை தரிசிக்க முடியாதவர்கள் மற்றும் சபரிமலை செல்ல முடியாதவர்கள் மடிப்பாக்கத்தில் உள்ள கோயிலுக்கு வருகை தரலாம். இங்கு இருமுடி ஏந்தி, 18 படிகள் ஏறி, நெய் அபிஷேகம் செய்து தங்கள் விரதத்தை முடித்து, ஐயப்பனின் அருளை பெற்றுக் கொள்ளலாம்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# பிரான்சின் புதிய பிரதமரானார் இளம் அரசியல்வாதி கேப்ரியல்



பிரான்ஸின் புதிய பிரதமராக 34 வயதான கேப்ரியல் அட்டால் நியமிக்கப்பட்டுள்ளார்.

பிரான்ஸ் வரலாற்றில் மிகவும் வயது குறைந்த பிரதமராக கேப்ரியல் அட்டால் பதிவாகியுள்ளார்.

கேப்ரியல் அட்டால், பத்து வருடங்களுக்கு முன் சுகாதார அமைச்சகத்தில் ஆலோசகராக இருந்துள்ளார். 2017ஆம் ஆண்டு இமானுவல் மேக்ரான் தேர்தலில் வென்றபோது, கேப்ரியல் நாடாளுமன்ற உறுப்பினரானார்.

அத்தோடு, திறம்பட நாடாளுமன்றத்தில் வாதாடும் கேப்ரியல், மேக்ரானின் கவனத்தை ஈர்த்ததில் ஆச்சரியம் எதுவும் இல்லை.

29 வயதில், கல்வித்துறையில் ஜுனியர் அமைச்சரான கேப்ரியலுக்கு, 2020 இல் பிரான்ஸ் அரசின் செய்தித் தொடர்பாளர் பொறுப்பு கொடுக்கப்பட்டது.

மேக்ரான் மீண்டும் ஜனாதிபதியாக பதவியேற்றபோது, சிறிது காலம் வரவு செலவு திட்ட அமைச்சராக இருந்த கேப்ரியலுக்கு, கடந்த ஜுலை மாதம் கல்வித்துறை கையளிக்கப்பட்டது.

இஸ்லாமியர்கள் அணியும் அபயாவுக்கு எதிராக அவர் நடவடிக்கை எடுத்தபோது, எடுத்த விடயத்தில் உறுதியாக நிற்கும் கேப்ரியலின் உறுதி, மேக்ரானுக்கு தெரியவந்தது.

ஆனால், அவை மட்டுமே மேக்ரான், கேப்ரியலை பிரதமராக தேர்வு செய்யக் காரணம் என்றும் கூறிவிடமுடியாது.

ஏனென்றால், இதற்கு முன் பிரதமராக இருந்த எலிசபெத் போர்ன், வெறும் 20 மாதங்கள் மட்டுமே பதவியில் நீடித்தார்.

இந்த நிலையிலேயே, பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவல் மேக்ரான் பிரபலமான கேப்ரியலை அந்த இடத்துக்குக் கொண்டு வந்துள்ளார்.

மேலும், ஜுன் மாதம் ஐரோப்பிய நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ளதோடு பிரான்ஸ் அரசை தேர்தலுக்கு வழிநடத்தும் பொறுப்பு கேப்ரியலுக்கு வழங்கப்பட்டுள்ளது.

# ஜப்பானில் மீண்டும் நிலநடுக்கம் பதிவு: புத்தாண்டிலிருந்து அவதியுறும் மக்கள்



ஜப்பானில் மீண்டும் ஒரு நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

அதன்படி நேற்றைய தினம் பிற்பகல் 2.29 மணியளவில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலநடுக்கமானது 6 ரிக்டர் அளவில் பதிவாகியுள்ளது. நிலநடுக்கத்தில் கட்டடங்கள் குலுங்கியதால், பொதுமக்கள் வீதிகளில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

மேலும், இந்த நிலநடுக்கத்தால் எந்தவிதமான உயிரிழப்புகளும் பதிவாகாத அதேவேளை, சுனாமி எச்சரிக்கையும் விடுக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பசிபிக் பெருங் கடலின் நெருப்பு வளையம் எனப்படும் ரிங்க் ஒப் பயரில் ஜப்பான் அமைந்துள்ளது.

இதன் காரணமாகவே அங்கு அடிக்கடி நிலநடுக்கம் ஏற்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.அந்த வகையில் இந்த ஆண்டின் புத்தாண்டு தினத்தன்றே ஜப்பானின் வடமேற்கு கடற்கரையில் உள்ள நோட்டோ தீபகற்பத்தில் கடுமையான நிலநடுக்கம் ஏற்பட்டது.

இந்த நிலநடுக்கமானது 7.6 ரிக்டர்களாக பதிவானது. அதே நேரம், சுமார் 200 பேர்வரை உயிரிழந்தனர்.

இந்த நிலநடுக்கத்தின் வீரியம் காரணமாக சுனாமி அலைகளும் எழுந்துள்ளன, இதனால் சுனாமி எச்சரிக்கையும் விடப்பட்டு, பொது மக்கள் பாதுகாப்பான இடத்திற்கு கொண்டு செல்லப்பட்டனர். இந்த பாதிப்பிலிருந்து அந்த நாட்டு மக்கள் முழுமையாக இன்னமும் மீண்டு வராத நிலையில், தற்போது மீண்டும் ஜப்பானில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளமை அந்நாட்டு மக்களை வெகுவாக பாதித்துள்ளது.

## மன்னாரில் பாடசாலைக்கு மணல் அகழ்வு:

# வன ஜீவராசிகள் திணைக்களம் வழக்கை வாபஸ் பெற இணக்கம்

(ந.லோகதயாளன்)

மன்னாரில் பாடசாலைத் தேவைக்கு மணல் அகழ பிரதேச செயலாளர் அனுமதி வழங்கிய நிலையில் மணல் ஏற்றிய ஜே.சி.பிக்கு எதிராக வன ஜீவராசிகள் திணைக்களம் தாக்கல் செய்த வழக்கை மீளப் பெற வன ஜீவராசிகள் திணைக்களம் இணக்கம் தெரிவித்துள்ளது.

மன்னார் மாவட்டத்தில் வனஜீவராசிகள் திணைக்களம் தொடர்பில் மாவட்டத்தில் நிலவும் பிரச்சனைகள் தொடர்பாக மாவட்டச் செயலகத்தில் அரச அதிபர் க.கனகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே மேற்படித் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

மன்னார் பிரதேச செயலர் பிரவின் கீழ் உள்ள ஓர் குளத்தில் கமநல சேவைத் திணைக்களத்தின் ஒப்புதலுடன் மண் பெறப்பட்டு அதனை அதே கிராமத்தில் உள்ள பாடசாலைத் தேவைக்கு வழங்க பிரதேச செயலாளர் அனுமதி வழங்கியிருந்தார்.

அவ்வாறு உரிய திணைக்களங்கள் அனுமதி வழங்கியதால் பிரதேச சபையின் ஜே.சி.பி. மூலம் அந்த மண் உழவு இயந்திரத்துக்கு ஏற்றப்பட்டு பாடசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

அனைத்துமே அரச திணைக்களமாக இருக்க அந்தப் பகுதி வன ஜீவராசிகள் திணைக்களத்துக்கு உரித்தான நிலையில், வன ஜீவராசிகள் திணைக்கள அனுமதி பெறப்படவில்லை எனத் தெரிவித்து பிரதேச சபையின் சாரதிக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அரச ஊழியர் அனுமதி இருப்பது தெரிந்தும், மேலதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தாமல் வழக்கெத் தாக்கல் செய்தமையால் நிர்வாக ரீதியில் ஏற்படும் நெருக்கடி தொடர்பில் மாவட்ட அரச அதிபர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனை அடுத்து ஆராய்ந்த வன ஜீவராசகள் திணைக்கள அதகாரிகள் வழக்கை வாபஸ் வாங்க இணக்கம் தெரிவித்தனர்.

இதேநேரம் எதிர் காலத்தில் சகல நடவடிக்கைகளிலும் மாவட்ட ரீதியில் திணைக்கள ரீதியிலான கலந்துரையாடல்களை தொடர்ந்து நடத்தவும் இணக்கம் காணப்பட்டது.



# கிழக்கு கல்விப் பணிப்பாளர் குழு சம்மாந்துறை விஜயம்!



( வி.ரி.சகாதேவராஜா)

கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் திருமதி சுஜாதா குலேந்திரகுமார் தலைமையிலான குழு நேற்று (9) செவ்வாய்க்கிழமை சம்மாந்துறை வலயத்துக்கு கொட்டும் மழைக்கு மத்தியில் விஜயம் செய்தது.

அங்கு அவருடன் மேலதிக மாகாண கல்வி பணிப்பாளர் ஜவாத் உள்ளிட்ட கல்வி அதிகாரிகள் குழுவினர் கலந்து கொண்டனர்.

முதலில் சம்மாந்துறை வலய கல்வி பணிமனை கல்வி சார் உத்தியோகத்தர்களுடனான சந்திப்பு வலயக் கல்விப் பணிப்பாளர் டாக்டர் உமர் மௌலானா தலைமையில் நடைபெற்றது. அதில் பிரதி உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் ஆசிரிய ஆலோசகர்கள் வளவாளர்கள் கலந்து கொண்டனர்.

பின்னர் அதிபர்களுக்காக கூட்டம் இடம் பெற்றது.

எதிர்வரும் க.பொ.த. சாதாரண தரத்தில் தோற்றும் மாணவர்களை மையமாகக் கொண்டு இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.



# இலங்கை வந்தார் பிரிட்டன் இளவரசி

## யாழ்ப்பாணத்துக்கும் விஜயம்

பிரிட்டனின் இரண்டாம் எலிசபெத் மகாராணியின் மகளான பிரிட்டன் இளவரசி அன்னே மற்றும் அவரது கணவர் வைஸ் அட்மிரல் சேர் டிம் லோரன்ஸ் மூன்று நாட்கள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இன்று பிற் பகல் 1.15 மணியளவில் இலங் கைக்கு வருகை தந்துள்ள னர்.

இலங்கை மற்றும் ஐக்கிய இராச்சியத்துக்கு இடையி லான இராஜதந்திர உறவு களின் 75ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இலங்கை அரசின் அழைப் பின் பேரில் பிரிட்டன் இளவரசி இலங்கைக்கு விஜயம் மேற் கொண்டுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக் கிரமசிங்கவையும் அவர் சந் திக்கவுள்ளார்.

அதேவேளை, யாழ்ப்பா ணம் மற்றும் கண்டி மாவட் டங்களுக்கு அவர் விஜயம் செய்யவுள்ளார் என்று தெரி விக்கப்பட்டுள்ளது.

# கல்முனை சுகாதார பணிமனையால் 2024 இன் நாள்காட்டி வெளியீடு!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்முனை சுகாதார பணிமனையின் தரமுகாமைத்துவ பிரிவால் வடிவமைக் கப்பட்ட 2024 ஆம் ஆண்டுக்கான புதிய நாள்காட்டி வெளியிடப்பட்டது.

இந்த நிகழ்வின் போது சுகாதார தகவல் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் ஐ.எம்.முஜீப் நாட்காட்டி ஒன்றைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திரு மதி சஹிலா இஸ்ஸடீனுக்கு வழங்கி வைத்தார்.




அதனையடுத்து பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் சகல பிரிவுத் தலைவர்களுக்கும் நாள்காட்டியை வழங்கினார்.

இந்த நிகழ்வில் பிராந்திய பணி மனையின் உத்தியோகத்தர்கள், ஊழி யர்கள் கலந்துகொண்டனர்.

# டெங்கு நோயால் பாதிக்கப்பட்டவர்கள் வைத்தியசாலைகளுக்குச் செல்லுங்கள்

## மன்னார் அரச அதிபர் மக்களிடம் பகிரங்க கோரிக்கை





(மன்னார் நிருபர்)

மன்னார் மாவட்டத்தில் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டவர்கள் அடையாளம் காணப்படும் சந்தர்ப்பத்தில் வீடுகளில் இருந்து சிகிச்சை பெற்றுக் கொள்ளுவதை தவிர்த்துக் கொள்ளுங்கள். வைத்தியசாலைக்கு சென்று சிகிச்சை பெற்று தொடர் கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டு வரும் சந்தர்ப்பத்தில் உயிராபத்துகளில் இருந்து பாதுகாத்துக் கொள்ள முடியும்.

மன்னார் மாவட்ட அரச அதிபர் கே. கனகேஸ்வரன் இவ்வாறு தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்தில் டெங்கு நோய் நிலவரம் தொடர்பாக ஆராயும் அவசர கலந்துரையாடல் நேற்று செவ்வாய்க்கிழமை(9) மதியம் மன்னார் மாவட்டச் செயலகத்தில் இடம் பெற்றது.

மன்னார் மாவட்ட அரச அதிபர் கே. கனகேஸ்வரன் தலைமையில் இடம் பெற்ற கலந்துரையாடலில் மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன், பிரதேச செயலாளர்கள், திணைக்கள தலைவர்கள், சுகாதார துறையினர், பொலிஸார் பொது சுகாதார பரிசோதகர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

அங்கு அரச அதிபர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு,

ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடும் போது மன்னார் மாவட்டத்தில் டெங்கு நிலைமை கட்டுப்பாட்டில் காணப்படுகின்றது. எனினும் மாவட்டத்தில் டெங்கு நிலவரம் தொடர்பாக விசேட கவனம் செலுத்தி வருகிறோம்.

மன்னார் மாவட்டத்தில் டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்துள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது. கூடுதல் அவதானம் செலுத்தும் வகையில் வீடு வீடாக சென்று பார்வையிட்டு டெங்கு நோயின் தாக்கத்தை கட்டுப்படுத்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

சிரமதான பணிகளை முன்னெடுத்து வருகிறோம். தொடர்ந்தும் சில தினங்களுக்கு மழை பெய்யும் என்பதால் விசேட கவனம் செலுத்தி வருகிறோம். டெங்கு தொடர்பாக பொது மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. சுகாதார துறையினருடன் பொலிஸ், ராணுவம், கிராம அலுவலர்கள் இணைந்து டெங்கு தொடர்பாக விசேட பரிசோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

பொது மக்களுக்கு அவசர அறிவித்தல் விடுக்கின்றோம். டெங்கு நோயால் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்ச்சியாக மருத்துவ பரிசோதனை மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்கு உற்படுத்தப்பட வேண்டும்.

எனவே டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்கள் என அடையாளம் காணப்பட்டால் வீடுகளில் இருந்து சிகிச்சை பெற்றுக் கொள்வதை தவிர்த்து வைத்தியசாலைக்கு சென்று சிகிச்சை பெற்றுக்கொள்ள வேண்டும். இதனால் டெங்கு நோயால் ஏற்படும் உயிராபத்துக்களை தவிர்த்துக் கொள்ள முடியும்.– என்றார்.





# வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியக புதிய அலுவலகம் நுவரெலியாவில்

(தலவாக்கலை நிருபர்)

இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் புதிய அலுவலகம் நுவரெலியா மாவட்டத்தில் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தலைமையில் திறந்து வைக்கப்பட்டது.

நுவரெலியா மாவட்டத்தில் வீட்டு வேலை மற்றும் இதர தொழில்களுக்கு அதிக எண்ணிக்கையான மக்கள் வெளிநாடுகளுக்கு செல்கின்றனர்.

இந்த மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு, நுவரெலியா மாவட்ட செயலகத்தின் ஐந்தாவது மாடியில் இந்த வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் புதிய அலுவலகம் நிறுவப்பட்டுள்ளது.

நுவரெலியா மாவட்டத்தை மையப்படுத்தி மாவட்ட மட்டத்தில் தேவையான பணிகளை மேற்கொள்ள முடியும்.

பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் வடிவேல் சுரேஷ், தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் பதில் செயலாளர் லால் சமரசேகர, நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபட, வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் மேலதிக பொது முகாமையாளர் அனுர லியான்வெல மற்றும் நுவரெலியா மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் முக்கிய அதிகாரிகள் இதன்போது கலந்து கொண்டனர்.